Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.138/2018

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயலெட்சுமி | Father Name | : வீரணன் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 21.05.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 21 day of 05.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது விருதுநகர் மாவட்டம், விருதுநகர் மேற்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.07.2017 ம் தேதி ஒத்தக்கடை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது ஒத்தக்கடை காவல் நிலைய குற்ற எண்309/2017 பிரிவு 147, 148, 294(b), 341, 342, 323, 324, 506(2) இதசன்கீழ் வழக்கு பதிவு செய்து சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பழனியப்பன் என்பவர் மேற்படி வழக்கை விசாரணை செய்து எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வாதி மற்றும் பிற சாட்சிகளை விசாரணை செய்து சிறப்பு சார்பு ஆய்வாளரிடம் கூறியதைபோல் என்னிடமும் வாக்குமூலம் அளித்தனால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

அன்யைதினமே மேலூர் அரசு மருத்துவமனை சென்று சம்பவத்தில் காயம்பட்ட மனோகர் மற்றும் குமார் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுகுனா என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பழனியப்பனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரிகள் மாண்புமிகு மதுரை முதன்மை நீதிமன்றத்தில் முன் ஜாமீன்

பெற்றதனால் எதிரிகளை கைது செய்யவில்லை இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து 1, 2, 3, 4, 7ம் எதிரிகள் மீது பிரிவுகள் 147, 294(b), 341, , 323, 324, 506(2) இதசன்கீழும், மற்றும் 5, 6ம் எதிரிகள் மீது பிரிவு 147, 148, 294(b), 341, 342, 323, 324, 506(2) இதசன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கை பதிவு செய்வதற்கு முன்னர் இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் குமார் மீது எதிரிகளின் குடும்பத்தை சேர்ந்த இளவரை தாக்கியதாக தாழ்த்தப்பட்ட சமூகத்தை தாக்கியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலிருந்து சுமார் 9 மணிநேரம் காலதாமதமாகவே இவ்வழக்கின் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரர் தனக்கு எழுதப்படிக்க தெரியாததானல் அவர் சொல்ல சொல்ல காவலரால் எழுதப்பட்டது என்றால் சரிதான், புகார்தாரர் சொல்ல, சொல்ல புகார் எழுதப்பட்டு அதை அவரிடம் படித்து காட்டப்பட்டது. இவ்வழக்கின் புகார்தாரர் ஊர் அரிட்டாபட்டி என்றால் சரிதான். வழக்கானது புகார்தாரர்கள் எதிரியின் வீட்டிற்கு சென்று சண்டை போட்டதாக உள்ளது என்றால் சரிதான். அசாஆ 4 மற்றும் அசாஆ 5 சம்பவமானது மாலை 07.20க்கு நடந்ததாகவும், அவர்கள் 3 மணிநேர கால தாமதமாக இரவு 10.30 மணிக்கு மேலூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்ததாக உள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் கார்த்திகேயன் என்பவர் மருத்துவமனையில் சேர்த்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கார்த்திகேயனை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவமானத காந்திநகரில் 20க்கும் மேற்பட்ட நபர்கள் சேர்ந்து தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகள் எந்த ஆயுதங்களை வைத்து புகார்தாரரையும், அவரது தரப்பினர்களையும் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்

2) புகாரில் சம்பவத்தை பார்த்தாகவும், அதை விலக்கிவிட்டதாகவும்

குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் எனது விசாரணையில் குமார் சம்பவத்தை பார்த்ததாகவும், விலக்கிவிட்டதாக சொல்லியுள்ளார். இவ்வழக்கின் புகார்தாரரும், குமாரும் சேர்ந்துதான் எதிரிகளின் வீட்டிற்கு சென்று சண்டை போட்டதாக உள்ளது என்றால் சரியல்ல, கேட்க மட்டும்தான் சென்றார்கள். எங்கள் சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த சாட்சிகள் அனைவரின் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டபோது அங்கு சம்பவத்தில் பயன்படுத்தியதாக சொல்லப்படும் பொருட்கள் இருந்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் ஆயுதங்கள், இரத்தம்படிந்த பொருட்கள் கைப்பற்றியதாக இல்லை என்றால் சரிதான்.

3) அதேபோல் மாதிரிவரைபடத்தில் முனிச்சாமி வீட்டை தவிர வேறு யாருடைய வீடும் அங்கு இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சிறப்பு சார்பு ஆய்வாளர் சொல்லியதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, முனிசாமியின் மகன் பாதிக்கப்பட்ட அவர் புகார்தாரர் மீது தாழ்த்தப்பட்ட சமூகத்தை தாக்கிய சட்டத்தின்கீழ் புகார்கொடுத்தனால் அதை சமரசம் செய்யவேண்டும் என்பதற்காக புகார்தாரர் எதிரி மீது பொய்யான புகார் கொடுத்து அதை சிறப்பு சார்பு ஆய்வாளர் சம்பவ இடம் செல்லாமல் புகார்தாரரிடமிருந்து சாட்சிகளின் பெயர்களை பெற்று வழக்கு பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு தேதியில் வைத்து காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை, எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.